**MCOP NO:4526/2022** **DATE: 14.07.2026**

ம.சா : 1

பெயர் : திரு.எர்கம் நாகராஜ்

த/பெ : திரு.எர்கம் செங்காலய்யன்

வயது : 46

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 14.07.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது கார் பஞ்சர் ஆகி விட்டதால் டையரை மாற்றுவதற்காக காரை ஓரமாக நிறுத்தி ஸ்டெப்னி டையரை எடுத்துக்கொண்டிருக்கும் போது இந்த விபத்து ஏற்பட்டது. விபத்து நடந்த சாலையானது தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். மசாஆ 4 ல் அடையாளம் தெரியாத லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எனது வாகனத்தை முறையான பார்க்கிங் லைட்டுகள் போடாமல் முறையான இடத்தில் நிறுத்தாமல் தேசிய நெடுஞ்சாலையில் நிறுத்தி வேலை செய்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் 4 முதல் 6 வரை உள்ளது அனைத்தும் தெலுங்கிலிருந்து ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்ட நபர் யார் என்று அவரின் பெயரோ, முத்திரை மற்றும் கையொப்பம் எதுவும் இல்லை என்பதால் மேற்படி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவை அல்ல என்றால் சரியல்ல. குற்றவியல் வழக்கு என்ன நிலையில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் விபத்து தேதியில் பணி நிமித்தமாக தான் காரில் சென்றேன். அப்போது தான் என் காரின் டையரானது பஞ்சர் ஆனது. நான் பணி நிமித்தமாக நான் காரை ஓட்டி சென்ற போது டையர் பஞ்சர் ஆகி விபத்து ஏற்பட்டது என்பதால் நான் ஏதேனும் இழப்பீடு பெற வேண்டும் என்றால் தொழிலாளர் நல தீர்ப்பாயத்தில் தான் மனு தாக்கல் செய்து பரிகாரம் தேடிக்கொள்ள முடியும் என்றும், இந்த நீதிமன்றத்திற்கு அந்த அதிகாரம் இல்லை என்பதால் மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு முறையான ஆவணங்கள் உள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியாது. மசாஆ 10 மற்றும் மசாஆ 11 ஆன மருத்துவ பில்லிற்காக மருத்துவரின் பரிந்துரை கடிதங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2021 ற்கு பின்னிட்டு நான் எந்த வித தொடர்சிகிச்சையும் செய்யவில்லை என்றால் சரிதான். மசாஆ 17 ஆன சம்பள ரசீதானது வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மசாஆ 17 ற்கு உண்டான வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான். என் முதல் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியபடி நான் பணி செய்து வருகிறேன் என்பதை காட்டுவதற்கு பணி நியமன ஆணையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இன்று நீதிமனறத்திற்கு நடந்து தான் வந்தேன். நான் தற்போது கார்டனில் செக்யூரிட்டி வேலை செய்து வருகிறேன். என்னுடைய ஓட்டுநர் உரிமத்தை நான் சரண்டர் செய்யவில்லை. விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சிகிச்சை பெற்ற போதே குணமடைந்துவிட்டது என்றும், வழக்கிற்காக காயத்தின் தன்மையை மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் கூறியபடி எனக்கு எந்தவித உபாதைகளும் இல்லை என்றும், அதற்கான உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டுள்ளது என்பதால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.